செய்தி வெளியீடு எண்:388 நாள் : 27.07.2016

# மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் துறை ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கலை பண்பாட்டுத்துறையின் பணிகளை மாண்புமிகு இந்து, சமயம் மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் 27.07.2016 அன்று மாலை 4.00 மணியளவில் ஆய்வுகள் மேற்கொண்டார்.

இந்த ஆய்வில், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய இடங்களில் செயல்படும் 4 அரசு இசைக்கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் செயல்படும் 2 அரசு கவின் கலைக் கல்லூரிகள், மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, அரசின் நிதியுதவி பெற்று செயல்படும் திருச்சிராப்பள்ளி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், மண்டல கலை பண்பாட்டு மையங்கள், மாவட்ட கலை மன்றங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும், கடந்த 5 ஆண்டுகளில் துறை அறிவிப்புகளை செயல்படுத்தியது குறித்தும் விரிவாக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது கலை பண்பாட்டுத்துறை ஆணையர் (பொறுப்பு) முனைவர் டி.ஜகந்நாதன்,இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சித் துறையின் இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் மற்றும் கலை பண்பாட்டுத்துறையின் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**